செ.வெ.எண்: 526 நாள்: 27.08.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஏற்பாட்டு பணியினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு.**

---

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை 28.08.2020 அன்று வருகைப் புரிவதை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பங்குபெறும் நிகழ்ச்சிகளின் முன்னேற்பாட்டுப் பணிகளை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இவ்வாய்வின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் மூன்று நிகழ்ச்சிகளின் பணிகளை நேரில் பார்வையிட்ட மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பயனாளிகள் மற்றும் தொழில்முனைவோர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தகுந்த ஏற்பாடு பணிகளை மாவட்ட நிர்வாகம் சிறப்பாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைவரும் சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் சிறப்பாக செய்திட கேட்டுக்கொண்டார்கள்.

இவ்வாய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அரவிந்தன், மாவட்ட திட்ட அலுவலர் திரு.பழனி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களும், காவல்துறை அலுவலர்களும் கலந்துக் கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**